அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 28/2025

எனது இலக்கம் : EST-7/06/INT/1002-1
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2025.10.24

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதமச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

# நேர்முகப் பரீட்சை சபைகளில் உறுப்பினர்களாகவும், உதவி அலுவலர்களாகவும் பணியாற்றியமைக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகள்

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2017.12.05 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 30/2017 தொடர்பில் உங்களின் கவனத்தை ஈர்க்கின்றேன். அதில் குறிப்பிட்டுள்ள செலுத்துகைகள் 2025.10.01 ஆந் தினத்திலிருந்து பின்வரும் பிரகாரம் திருத்தம் செய்யப்படுகின்றது.

02. **நேர்முகப் பரீட்சை குழுவிலுள்ள உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள்**

| நேர்முகப் பரீட்சை சபை | கொடுப்பனவு |
|---|---|
| I. பதவிநிலை தரங்களிலுள்ள பதவிகளுக்காக தகைமையுடையவர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை சபையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் | ஒரு நபரை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்துவதற்காக ரூ.115/- |
| II. பதவிநிலைத்தரமொன்றினுள், ஒரு தரத்திலிருந்து இன்னொர் தரத்திற்கு தரமுயர்த்துவதற்காக தகுதியுடையவர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் | ஒரு நபரை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்துவதற்காக ரூ.85/- |
| III. பதவிநிலை தரமற்ற தரமுள்ள பதவியொன்றுக்கு தகுதியுடையவர்களை தேர்ந்தெடுப்பதற்காக அல்லது பதவிநிலை அல்லாத தரத்திற்குள் உயர்த்துவதற்காக தகுதியுடையவர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் | ஒரு நபரை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்துவதற்காக ரூ.45/- |
| IV. ஆரம்ப தரத்திலுள்ள பதவியொன்றுக்கு தகுதியுடையவர்களை நியமிப்பதற்காக அல்லது ஆரம்ப தரத்திற்குள் உயர்த்துவதற்காக தகுதியுடையவர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் | ஒரு நபரை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்துவதற்காக ரூ.25/- |

03. அரச சேவைக்குள் அமைச்சரையினால் நியமனம் செய்யப்படும் திணைக்களத் தலைவர்கள் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட தாபனங்கள் அல்லது அரசிற்கு சொந்தமான தாபனங்களின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்குரியதாக தகைமையுடையவர்களை நியமிப்பதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை குழுவிற்கான கொடுப்பனவுகளை செய்யும் போது, மேற்படி கொடுப்பனவுகளுக்கு வெளியே ஒரு உறுப்பினருக்கு நாளொன்றுக்கு ரூ.2,500/- எனும் கொடுப்பனவொன்றை செலுத்துவதற்கு முடியும்.

04. கிழமையின் வேலை நாட்களில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையின் உறுப்பினர்களுக்கான மேற்கூறப்பட்ட துண்டுக்கூலி அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கும் போது ஒரு உறுப்பினருக்கு கிடைக்கப் பெறும் மொத்தக் கொடுப்பனவு ரூ.1,150/- இனை விட குறைவாக இருந்தால் அச்சபையின் உறுப்பினர்களுக்கு துண்டுக்கூலி அடிப்படையில் செலுத்தாமல் நாளொன்றுக்கு ரூ.1,150/- வீதம் என்ற வகையில் கொடுப்பனவொன்றினை செலுத்துவதற்கு முடியும்.

05. வார இறுதி நாட்களில் அல்லது அரசாங்க விடுமுறை தினங்களில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்காக மேற்குறிப்பிட்ட இரண்டாம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள துண்டுக்கூலி அடிப்படையில் செலுத்துவதற்கு மேலதிகமாக 2013.10.07 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 21/2013 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் உபபிரிவு 5.2 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தருக்கு உரித்தான விடுமுறை தின சம்பளமும் செலுத்த முடியும். இவ் உத்தியோகத்தர்களுக்கு பிரிவு 04 இன் ஏற்பாடுகள் உரித்தாகாது.

06. **நேர்முகப்பரீட்சைச் சபைகளின் உதவி புரிகின்ற அலுவலர்களுக்கான படிகள்**

வார இறுதி நாட்கள் மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை சபையின் உதவிக் கடமைகளுக்காக பங்குபற்றும் அலுவலர்களுக்காக கீழ்வரும் வகையில் படியொன்று வழங்க முடியும். இக்கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக எவ்வித படியும் இவ்வலுவலர்களுக்கு வழங்கப்பட மாட்டாது .

| **அலுவலர்களின் வகுதி** | **நேர்முகப் பரீட்சையில் உள்ளடக்கப்பட வேண்டிய அதிகபட்ச உதவி பணியாட்தொகுதியினரின் எண்ணிக்கை** | **ஒருநாளுக்குரிய அதிகபட்ச படி** |
|---|---|---|
| I. பதவிநிலை அலுவலர்கள் | 01 | 2013.10.07 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 21/2013 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க 2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் உபபிரிவு 5.2இன் ஏற்பாடுகளின் பிரகாரம் உரித்தான விடுமுறை தின சம்பளம் அல்லது ரூ.2,100 என்ற பெறுமதியில் அதிகமான பெறுமானம் |

| | | |
|---|---|---|
| II. அபிவிருத்தி உத்தியோகத்தர்/ முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் அல்லது அதற்கு சமமான தரங்கள் | 02 | நேர்முகப் பரீட்சை நடைபெற்ற காலத்திற்காக காணப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க உத்தியோகத்தர்களுக்கு உரித்தான மேலதிக கால பணம் அல்லது ரூ.1,200/- எனும் பெறுமதியில் அதிகமான பெறுமானம் |
| III. அலுவலகப் பணியாளர் சேவை | 01 | நேர்முகப் பரீட்சை நடைபெற்ற காலத்திற்காக காணப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க உத்தியோகத்தர்களுககு உரித்தான மேலதிக கால பணம் அல்லது ரூ.750/- எனும் பெறுமதியில் அதிகமான பெறுமானம் |
| IV.சாரதிகள் | 01 | உத்தியோகத்தருக்கு சாதாரணமாக காணப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க உரித்தான மேலதிக கால பணம் அல்லது ரூ.750/- எனும் பெறுமதியில் அதிகமான பெறுமானம் |

07. 2025 ஆம் ஆண்டில் இதற்காக மேலதிக மானியங்களை கோரக்கூடாது.

08. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளது.


ஒப்பம்/ எஸ்.ஆலோகபண்டார

செயலாளர்

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 011-2697233

தொலைநகல் : 011-2692158

மின்னஞ்சல் முகவரி: ade-vii@pubad.gov.lk